RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI:10.34256/irjt22s110

# இஸ்ரவேல் மக்களின் திருமண முறைகள்

**தே. எட்வர்ட்** [அ, *]

[அ] கிறித்தவத் தமிழியல்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை- 625021, தமிழ்நாடு, இந்தியா.

# The Marriage Culture in Isreale Society

**D. Edward** [a, *]

[a] Department of Christian Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: idajesy@yahoo.co.in

Received: 15-03-2021
Revised: 13-12-2021
Accepted: 17-12-2021
Published: 02-02-2022

Check for updates

**ABSTRACT**

In ancient times man did not have the proper habits of hunting social status. Marriage patterns that regulate sexual relations have not even emerged. Inheritance-based marriage systems emerged only in an advanced Patriatic society from an ethnic social status. The people of Israel, the descendants of Abraham, settled in Palestine and began to live there. Marriage is seen as one of the primary biological functions of mothers. Like the Tamil marriage, the marriage is seen as one to one. The various stages of marriage are described in the Bible as female engagement, dress, grooming, informing relatives of the marriage, going to the wedding procession, and taking the bride home.

**Keywords:** Israle peoples, Ethnic Group, Marriage System, Mose, Yakkobu, Laya, Ragel, Betrothal.

## முன்னுரை

பழைய ஏற்பாட்டில் ஆதாம் ஏவாள் படைப்பும் அவர்களது சந்ததியினரின் வாழ்வும் கூறப்படுகிறது. உலகில் பாவம் பெருகியதால் பூமியை நீரால் அழித்து மீண்டும் புனரமைப்புச் செய்வதைப் போல நோவாவின் பேழையில் உயிரின வகைக்கு ஒன்றாக பாதுகாத்து வெள்ளம் வடிந்த பின் அவர்கள் பல்கி பெருகியதாகக் கூறப்படுகிறது. நோவாவின் பேழையில் இருந்து வெளிவந்த நோவாவின் புதல்வர்கள் சேம், காம், எப்பேத்து ஆகியோரின் சந்ததியினர் பலர் வழிவழியாகப் பல்கி பெருகியதை தொடக்க நூல் 10-2 குறிப்பிடுகிறது. சேமின் வழி வந்தவரான தெராகுவிற்கு பிறந்தவர்கள் ஆபிராகம், நாகோர், ஆரான் ஆகியோராவர். ஆபிரகாமை கடவுள் அழைத்துத் தான் கூறும் நாட்டிற்குச் செல்லுமாறு பணித்தார். அவருடன் சாராயும் லோத்தும் சென்றனர். இவர்களுடன் ஆபிரகாம் கானான் நாட்டிற்குச் சென்று அங்கு பஞ்சம் ஏற்பட்டபடியால் அங்கிருந்து எகிப்துக்குச் சென்றார்கள். பின்பு நெகேபுக்கும் சென்று குடியேறினார்கள். சாராவுக்கு கடவுள் வாக்களித்தபடி கருத்தங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அப்பொழுது முதிய வயதெய்தியிருந்தார் ஆபிரகாம். அவர்களது பிள்ளை ஈசாக்கு ஆவார். ஈசாக்கிற்கும் ரேபேக்காவிற்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் குழந்தையின்மையால் கடவுளிடம் மன்றாடி கடவுள் ரெபேக்கா கருத்தங்க அருளினார் எனத் தொடக்க நூல்கள் கூறுகிறது. இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். ஏசா, யாக்கோபு ஆகிய இருவரும் இரு இனத்தார் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இருவருக்குள் முட்டி மோதி சண்டையிட்டுக் கொள்ளும் நிலை இருக்கிறது என்று கடவுள் ரெபேக்காவிடம் கூறினார். ஏசா யாக்கோபை கொல்ல முயற்சி செய்தான். அவனிடமிருந்து தப்பித்தான் யாக்கோபு ஈசாக்கு ஆசிர்வதித்து கானானியப் பெண் யாரையும் மணந்து கொள்ளாதே என்று கூறி தாய்மாமனான லாபான் புதல்வியர்களான லேயாவையும் ராகேலையும் மணந்து கொண்டார். ராகேல் மலடியாகவே இருக்க லேயா கருத்தரித்தாள். மகவைப் பெற்றெடுத்ததும்

மீண்டும் மீண்டும் கருத்தரித்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள் லேயா. இதனால் கோபம் கொண்ட ராகேல் அவளுக்குப் போல் தனக்கும் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று யாக்கோபை கேட்டாள். கடவுள் செவி சாய்க்க வேண்டுமே என்று கூற தன் பணிப்பெண் பில்காவை மனைவியாக்கிக் கொண்டு தனக்காக அவள் பிள்ளைப் பெற்றுத் தருவாள் என்றாள். அவளுடன் கூடி வாழ்ந்த யாக்கோபு இரண்டு மகவைப் பெற்றெடுக்க. லேயா தன் பணிப்பெண்ணான சில்பாவை யாக்கோபுக்குத் திருமணம் செய்து வைத்தாள். அவளும் இரண்டு குழந்தைகளை ஈன்றெடுத்தாள். பின்பு ராகேலுக்கு கடவுள் இறைஞ்சி குழந்தை வரம் கொடுத்தார். ராகேலும் யோசேப்பைப் பெற்றாள் இவ்வாறாக பன்னிரெண்டு குழந்தைகள் யாக்கோபிற்கு பிறந்தனர். யோசேப்பு பார்வோன் மன்னனிடம் பணியாளாகச் சேர்ந்தான். யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களும் அவர்களுடைய சந்ததியினருமே இஸ்ரவேல் மக்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள்தான் பார்வோன் மன்னின் ஆட்சியின் கீழ் அடிமைகளாக நடத்தப்பட்டனர். அம்மக்களிடமிருந்தே இறைவாக்கினர்கள் தோன்றி அவர்களுக்கு வழிகாட்டினர். இஸ்ரவேல் மக்களின் சமூக வாழ்வில் பல்வேறு கூறுகள் காணப்படுகின்றன. அவர்தம் பழக்கவழக்கங்கள், குடும்ப அமைப்பு, திருமண முறைகள், சடங்குகள், வழிபாடுகள், தொழில்கள் எனப் பலவற்றைப் பற்றிய செய்திகள் பழைய ஏற்பாட்டில் காணக்கிடைக்கின்றன. அவர்களது திருமண முறையானது பண்டைக் காலத்து தமிழ் திருமண முறைகளோடு ஒத்துக் காணப்படுவதை அறிய முடிகிறது.

## இஸ்ரவேல் சமூகத்தின் நிலை

மனித நாகரிகத்தில் வேட்டைச் சமூக வாழ்விற்குப் பின்னர் நாகரிக வளர்ச்சி பெற்று வேளாண் சமூகமாக நிலைபெற்ற நிலையினை விவிலியத்தில் காண முடிகிறது. விவிலியத்தில் கூறப்படும் சமூகம் உடைமைச் சமூகப் பண்புகளையே பெரிதும் வெளிப்படுத்துகின்றது. வேட்டையாடுதலும் அம்மக்ககளிடம் காணப்படுகிறது. ஆயினும் உடைமைச் சமூகத்திற்கான பண்புகளே மிகுந்து காணப்படுகின்றன. வேளாண்மைச் சமூகமாதலின் உடைமையும் சொத்துரிமையும் தோன்றுவதற்கு ஏதுவாகிறது. அம்மக்களிடம் பலதார மணம் வழக்கில் இருந்தது. யாக்கோபு ராகேல், லேயா தவிர பில்கி, சில்பா ஆகியோரையும் மணந்து அவர்கள் மூலம் குழந்தைகள் பெறுவதைக் காணமுடிகிறது. ஆயினும் பெண் ஆண் ஒருவனுக்கே தன் வாழ்வை அளிக்கும் உடைமைத் தன்மை காணப்படுகிறது. திருமணம் தோன்றியதற்கு முதன்மை காரணம் வாரிசுரிமையை அடையாளம் காண்பதற்கே எனலாம். "பல கணவ அமைப்பு முறையில் ஒருவனின் மகன் இவன் என்று சுட்டிக் கூறும் தன்மை இல்லாமல் போயிற்று. இச்சிக்கலைத் தீர்க்கச் சமூகமே ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாட்டை உருவாக்கியது. ஒருத்தியை ஒருவனுக்கு உடைமையாக்குவதில் திருமணச்சடங்குகள் பெரும் பங்காற்றின" என்று கூறுவதற்கிணங்க இனக்குழுச் சமூக நிலையில் இருந்து வளர்ச்சி பெற்ற சமூகமாகவே பழைய ஏற்பாட்டில் கூறப்படும் மக்கள் சமூகங்கள் காணப்படுகின்றன என்பதை ஆதாம் ஏவாள் இணையை கடவுள் உருவாக்கியதைக் கொண்டு அறியலாம் (Selvaraj, 2016). ஆண், பெண் என்றில்லாமல் கணவன், மனைவியாக வாழவே அவர்களை பூமியில் சேர்த்தார் எனக் காணமுடிகிறது. கணவன், மனைவி என்னும் பண்பு உடைமைச் சமூகத்தின் பண்பாகும். ஒருவனுக்கு ஒருத்தியைத் திருமணம் செய்து அதன் மூலம் குழந்தை பெறுதல் அவர்கள் சந்ததி பெருகுதல் என்பதாக தொடர்ச்சியாக காணமுடிகிறது. இஸ்ரவேலர்களின் இனத்திலும் கணவன், மனைவி என்னும் நிலை மணச் சடங்கினால்தான் நிலைபெறுகிறது.

இஸ்ரவேல் சமூகம் நிலவுடைமைச் சமூகப் பண்புகளைக் கொண்டிருந்தது என்பதை அச்சமூகத்தின் குடும்ப அமைப்பே சான்றாக விளங்குகிறது. "கால்நடைகளின் பெருக்கத்துக்கு ஆண் காரணமாக இருந்தான். அதனால் சமூகத்தில் ஆணின் கை ஓங்கியது. நிலை உயர்ந்தது. அந்தஸ்து மேம்பட்டது. இங்கு கால்நடை வளர்ப்பு தந்தை வழிச் சமுதாயத்தை ஏற்படுத்தியது" என்னும் கூற்றானது மேய்ச்சல் சமூக நிலையில் விலங்குகளை உடைமை கொண்ட ஆண்கள் அதன்வழியே நிலத்தினையும் உடைமை கொண்டனர் (Perumalsamy, 2007). சொத்துடைமைச் சமூகமாக உருப்பெற்ற பின்னர் பெண்வழியில் உரிமையற்ற தந்தை வழி உரிமை கொள்வது தோன்றியது. இத்தகைய சமூக நிலையினை இஸ்ரவேல் சமூகத்தில் காணலாம். தந்தைவழியில்தான் சந்ததியினர் கூறப்படுகின்றனர்.

மேலும் தலைமகனுரிமைக்கான தன் தம்பி யாக்கோபை ஏசா கொல்ல முயன்றதை தொடக்க நூலில் காணலாம். எனவே அச்சமூகம், தந்தையுடைமைச் சமூகமாகவே இருந்தது. எனவேதான் “தந்தை வழி உரிமையை எபிரெய குடும்பம் அது ஒரு குட்டிசாம் ராஜ்யமாகும். அதில் தந்தை ஆளுகை செய்கிறவராக உள்ளார். எந்த பொருளைக் கண்டுபிடிக்கிறாரோ அவரே அதற்கு தந்தையாகக். கருதப்படுகிறார் ஏனெனில் அவரே பாதுகாவலராக இருக்கின்றார் “என்று கூறப்படுகிறது.

தந்தையே குடும்பத்தில் மனைவி மற்றும் பிள்ளைகளுக்குத் தலைவன். அதிகாரங்கள் அனைத்தும் இவர் மூலமே செயல்படுத்தப்படுகிறது. மோசேயின் சட்டமும் இந்த தலைமைத்துவ அதிகாரத்தை உறுதி செய்கிறது. குடும்ப காரியங்களை பெருமளவில் செயல்படுத்துவது தகப்பனே ஆகும். தகப்பனின் அதிகாரம் அவரது மூத்த மகனுக்குத் தரப்படுகிறது. தகப்பன் மரமணடையும் சூழலில் மூத்த மகனே தகப்பன் நிலையில் எல்லா குடும்ப காரிங்களையும் கவனிக்க வேண்டும். குடும்பத்தில் தகப்பன் உயர்ந்த மதிப்புடையவராக உள்ளார். பெற்றோருக்குப் பிள்ளைகள் கீழ்ப்படிவது கட்டாயப்படுத்தப்படுகிறது. கீழ்ப்படியாமைக்கு மரண தண்டனையை செயல்படுத்த அறிவுறுத்துகிறது. இவ்வாறு மனைவி பிள்ளைகள் அனைவரும் தந்தையின் கட்டளையின்படி நடத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தும்போது அது தந்தைவழிச் சமூகமாக இருப்பதை அறியலாம். இச்சமூகத்தில் திருமணம் என்பதும் பெற்றோர் இசைவு திருமணமாகவே இருக்கும் எனலாம்.

## இஸ்ரவேலரின் சமூகத்தில் திருமணம்

மணச்சடங்கானது ஆண், பெண் இருவரும் இணைந்து குடும்பமாவதைக் குறித்து நிற்கிறது. சமூக ஏற்புடன் திருமணம் செய்வதே குடும்ப அமைப்பை உருவாக்கும் நல்வழி எனக் கடைபிடிக்கப்படுகிறது. “ஒரு குடும்பத்தை உருவாக்குவதில் சமூக ஏற்புப் பெற்ற திருமணம் இன்றியமையாத நிலையை வகிக்கிறது” என்ற கூற்றிற்கிணங்க சமூக ஏற்புடன் கூடிய திருமணம் விவிலியத்தில் ஏற்புடையதாகக் கருதப்படுகிறது (Vijaya Lakshmi, 2010). பெற்றோர் இசைவு மணம் என்றும் கற்பு மணம் என்றும் இதனைத் தமிழில் விளக்குவர். “பெண்ணின் பெற்றோர் கொடுக்க மணமகன் ஏற்றுக் கொள்ளுவதே கற்பு வாழ்வின் தொடக்கமாக இருந்தது. எனினும் கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டு என விதிப்பதால் எவ்வாறேனும் திருமண வினையொன்று நடத்தல் இன்றியமையாதது என்பது தொல்காப்பியர் கால நிலையாகும்” என்று கற்பு மணம் கொடுப்போர் கொடுக்க பெறுவோர் பெற்று திருமணம் நடைபெற வேண்டும் என்று விதிக்கிறது (Thatchinamoorthy, 2016). விவிலிய காலத்திலும் கொடுப்போரும் பெறுபோருமான பெற்றோர்கள் வழியே திருமணங்கள் நடைபெற்றன. ஆயினும் திருமணத்திற்கு முன்னும் பின்னும் காதல் வாழ்வும் இருந்ததைக் காணமுடிகிறது. எபிரெய பண்பாட்டில் மகனுக்கு மனைவியை தேர்ந்தெடுப்பது பெற்றோரின் பொறுப்பாகும். இந்த தேர்வுக்குக் காரணம் தனது மகனுக்கு வரும் மனைவி குடும்பத்தில் ஓர் அங்கம். ஆகவே அவள் குடும்ப அங்கத்தினர் ஆவதற்குத் தகுதியுள்ளவளா என்பதை அறிய இந்த முயற்சி எடுக்கப்படுகிறது. சில வேளைகளில் மகனையோ அல்லது பெண்ணையோ சம்மதம் கேட்பதும் அனுமதிக்கப்பட்டது. முடிவான தீர்வு பெற்றோரே செய்வர்.

திருமணத்திற்குப் பின்னர் மற்றும் முன்னர் அன்பு செலுத்துவதை விவிலியம் கூறுகிறது. ஈசாக்கு திருமணம் முடித்த பின்னரே தன் மனைவியின் மேல் அன்பு செலுத்தினார். யாக்கோபு திருமணத்திற்கு முன்பே ராகேலிடம் அன்பாய் இருந்தார். (தொ.நூ.24:67; 29:10-18). சவுலின் மகள் மீகாள் திருமணத்திற்கு முன்பே தாவீதின் மேல் அன்பு வைத்தாள் (1 சாமு.18:20).

பெற்றோர் தங்கள் பெண்ணை மணமகனுக்கு கொடுக்கும் போது, தங்கள் குடும்பத்தின் வருமானம் உற்பத்தி குறைவுபடுகிறது. ஏனெனில் திருமணத்திற்கு முன்பு மகளே ஆடுகளை மேய்ப்பது அல்லது ஏதாகிலும் குடும்ப உயர்வுக்கு வேலை செய்கிறாள். ஆகவே மணமகனே (வி.ப.2:16) பெண் வீட்டுக்கு பொருளாகவோ அல்லது உழைப்பை யோகொடுப்பது வழக்கம் (William Barclay, 1981). யாக்கோபு தனது உழைப்பேயே கொடுத்து மனைவியைப் பெற்றான் (தொ.நூ.29:18). ஈசாக்கு ரெபெக்காள் மணமகளாக தேர்வு செய்த போது, வேலையாள் எலெயாசர் மணமகளுக்கும், வீட்டில் இருந்தவர்களும் பொன்னுடைமைகளை கொடுத்தது சிறந்த சான்றாக அமைகின்றது (தொ.நூ.24:53). இவர்களுடைய

திருமண முறையில் மணப்பரிசு வழங்குவது கூறப்படுகிறது. தமிழகத்திலும் சங்க காலத்தில் நடைபெற்ற திருமணங்களில் பொருள் கொடுத்துப் பெண்ணை மணத்தல் என்பது காணப்பட்டது. யாக்கோபு தன் உழைப்பைக் கொடுத்து ராகேலை மணத்தல் என்பது பொருள் கொடுத்து மணப்பதற்கு நிகரானதாகக் கொள்ளத்தக்கதாகும்.

## பெண் நிச்சயதார்த்தம்

திருமணத்திற்கு முன்பு பெண்ணை நிச்சயம் செய்தல் ஒரு மரபாக எல்லா சமூகங்களிலும் காணப்படுகிறது. பண்டைத் தமிழகத்தில் பெண்ணை உரிமை கொள்ளும் முன் மன்றலில் பெரியோர் கூடி திருமணம் நிச்சயம் செய்வதுண்டு. "கோவலன் கண்ணகி இருவரின் பெற்றோரும் ஒருபெரு நாளில் மணவிழாவைக் காண விரும்பி முடிவு செய்தனர். திருமணம் முடிவு செய்த பின்னர். யானையின் பிடரியிலே மகளிர் இருவரை அமர வைத்து மணவிழாச் செய்தியை மாநகர்க்கு அறிவித்தனர்" என்று சிலப்பதிகாரத்தில் மணம் செய்வதற்கான நிச்சயதார்த்தம் நடைபெற்றமையை ஊரார்க்கும் அறிவிக்கும் வழக்கம் கூறப்படுகிறது (Selvaraj, 2016). இஸ்ரவேல் சமூகத்திலும் ஊரார் கூடி மணமக்களை முடிவு செய்து அவர்களுக்குள் மணவினை நடைபெறுவதற்கு ஒப்புதலை வழங்குகின்றனர். நிச்சயம் செய்த பின் ஒரு வருடத்திற்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதற்குப் பின்னர் அந்த நிச்சயம் மதிப்பிழந்து விடும் என்றும் கூறப்படுகிறது. "திருமண உறுதிக்கு அடையாளம் வாக்குறுதியல்ல. மாறாக நிச்சயதார்த்தமாகும். ஏனெனில் வாக்குறுதி கொடுத்தவர்கள் மறுத்து விட வாய்ப்புண்டு. எனவே திருமண நிச்சயமே முடிவானது, மற்றும் உறுதியானதும் கூட, நிச்சயதார்த்த விழாவில் இருகுடும்பமும் சாட்சியோடு கூட சந்திப்பர். வாலிபன் கன்னிப் பெண்ணுக்கு தங்க மோதிரத்தை அணிவித்து, இந்த மோதிரத்தால் நீ எனக்கு பிரித்தெடுக்கப்படுகிறாய். இஸ்ராயேல் மற்றும் மோசேயின் சட்டம் இதை உறுதி செய்கிறது. நிச்சயத்துக்கும், திருமணத்துக்கும் இடையே ஓராண்டு இடைவெளி இருக்க வாய்ப்புண்டு. இரண்டும் வெவ்வேறு நிகழ்வாகும். (இ.ச.20:4). என்று கூறுவதில் திருமணத்திற்கு முன்னர் உறுதி செய்யப்படுவது நிகழ்கிறது. அதற்குப் பின்னரே திருமணம் செய்துகொள்வது நிகழ்கிறது.

## திருமண நிகழ்வு

இஸ்ரவேலர் சமூகத்தில் திருமண நிகழ்வு சிறப்பாக நடைபெறுகிறது. மணமக்கள் அரசர், இராணி அலங்கரிக்கப்படுவதைப் போல ஆடை மற்றும் நகையால் அலங்கரிக்கப்பட்டு அழைத்து வரப்படுகின்றனர். வசதிபடைத்தவராக இருப்பின், மணமகள் தங்க கிரிடம் அணிந்து வருவாள். மணமகனும், மணமகளும் அதிக அலங்காரம் பெறுவர். மணமகளுக்கு சிறப்பான அலங்காரம் அவள் ஆடையிலும், நகைகளாலும் உண்டான அலங்காரமாகும் (எரே.2:32). என்று மணமக்கள் அலங்காரம் குறித்து விவிலியம் குறிப்பிடுகிறது.

மணமகளின் உறவினர் மணமகளை அவள் புதிதாக குடியேறி வாழப்போகும் மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். மணமகனும் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு மணமகளை அழைத்து வர ஆயத்தமாவார். தனது வீட்டை விட்டு புறப்படும் முன்னர் மணமகள் தனது உறவினரிடமிருந்து ஆசீரைப் பெறுவது வழக்கமாகும் (தொ.நூ.24:60).

## திருமண ஊர்வலம்

மணமகன், மணமகள் இல்லம் சென்று ஊர்வலமாக அவளை அழைத்து வருவது மரபு. திருணம் இரவு நேரத்தில் நடைபெறும். மணமகள் வீடு போகாத உறவினர்கள் விளக்கோடு இந்த ஊர்வலத்தில் கலந்து, மணமகனோடு சேர்ந்து விருந்து சாலைக்குள் பிரவேசிக்க வேண்டும். விளக்கு இல்லாமல் ஊர்வலத்தில் கலந்து கொள்வது சாத்தியமாகாது (மத்.25:11). ஊர்வலத்தில் வாத்தியக் கருவிகள் இசைக்கப்படும். நடனக் களிப்பும் உண்டு (எரே.7:34). மணமகள், மணமகன் வீட்டுக்குள் நுழைந்த உடன் இருவரும் பெரியவர்கள் மூலம் வாழ்த்துக்களை பெறுவர் (யோ.2:1-11). என்று திருமண ஊர்வலங்கள்

அக்காலத்திலேயே நடைபெற்றமையைக் காணமுடிகிறது. தமிழ்த் திருமணங்களிலும் ஊர்வலமாகச் செல்லும் வழக்கம் காணப்படுகிறது.

## திருமண விருந்து

திருமண விருந்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு விருந்தினரும் திருமண ஆடைகள் அணிந்து கொள்ள வேண்டும் (மத்.22:12). என்று கூறப்படுகிறது. திருமண விருந்துக்கு பொறுப்பானவர் விருந்தினர்களை நன்கு உபசரிக்க வேண்டும். அவர் விருந்தினர்களுக்கு நன்றி கூறி வரவேற்று உபசரிப்பார். விருந்துண்ணும் வேளையில் விடுகதையும் கூறப்படுவதுண்டு (நீத.14:12-18). விருந்தினர் மணப்பெண்ணை புகழுதல் உண்டு (ரூத் 4:11). மணமக்கள் எல்லா வளமும் பெற்று நீடூழி வாழ விருந்தினர் வாழ்த்துவதுண்டு. அதாவது பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்துவது போல வாழ்த்துவார்கள்.

இவ்வாறு அன்றைய இஸ்ரவேலர் சமூகத்தில் நடைபெற்றத் திருமணத்தின் பல்வேறு நிகழ்வுகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

## முடிவுரை

திருமணம் என்பது உடைமைச் சமூக ஏற்பாடெனக் கொள்ளலாம். நிலவுடைமை ஏற்பட்ட பின்னர் சொத்துக்கு வாரிசினை அடையாளம் காணும் வகையில் பெண் குடும்ப அமைப்பிற்குள் செறித்துக் கொள்ளப்படும் வகையில் திருமண முறைகள் ஏற்பட்டன. கற்பு மணமே உலகெங்கிலும் உடைமைச் சமூககத்திற்கானதாக அமைந்திருந்ததை இஸ்ரவேலர் சமூகத்தில் நடைபெறுகின்ற கற்பு மணத்தைக் கொண்டு அறியலாம். திருமணத்தின் முன்பு நிச்சயதார்த்தம் நிகழ்கிறது. அதற்குப் பின் திருமண நிகழ்வானது பெரும் ஆரவாரத்துடன் நடைபெறுகிறது. உயரிய ஆடைகளுடன் மணமக்கள் அலங்கரிக்கப்பட்டு அழைத்து வரப்படுகின்றனர். மேலும் திருமண நிகழ்வின் போது ஊர்வலம் செல்கின்றனர். திருமண நிகழ்வில் கலந்து கொள்வோர்க்கு விருந்தும் தரப்படுகிறது. மணமகளை உரிய வகையில் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பெற்றோர்க்கு உரியதாகக் காணப்படுகிறது. பொருள் கொடுத்தும் உழைப்பினைக் கொடுத்தும் மணக்கும் நிலை அன்றைய சமூகத்தில் காணப்பட்டதை அறிந்து கொள்ள முடிகிறது.

## Reference

Perumalsamy, V., (2007) Sangakala Thamizhagathin Samooga Nilai, Bharathi Puthakalayam, Chennai, India.

Selvaraj, Silambu N., (2009) Pandai Tamilar Thirumana valkai, Kavya pathippagam, Chennai, India.

Selvaraj, Silambu N., (2016) Tholtamizhar Thirumanamuraikal, Kalachuvadu Publications, Nagercoil, India.

Thatchinamoorthy, A., (2016) Thamizhar nakarigamum panpaadum, Ainthinai Pathippagam, Chennai, India.

William Barclay, (1981) The Daily Study Bible, The Gospel at mathew, Vol. I, Chapters 1-10, Theological Publication in India, Bangalore

Vijaya Lakshmi, R., (2010) Thamizhaka Magalir, Sandhya Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License